# PERSONNEL MANAGEMENT IN THE PELWATTA SUGAR INDUSTRIES LTD

## பெல்வத்தை சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்டின் ஆளணி முகாமை

This Research Study (Dissertation) Was Submitted as a Part of Business Administration (Special) Degree Part (iii) Examination in 1992 / 93 - (1995)

**U. L. MOHAMED BUHARY**
**Reg No : EUSL/TT/88/BAD/106**
**Index No: Ms - 31**
**BBA, Part III**

FCM54
Project Report
Library - EUSL
24426
LIBRARY
19 - 1 - 1996
EASTERN UNIVERSITY, Sri Lanka

Department of Commerce and Management Studies
(Displaced Student of Eastern University)
University of Colombo
Colombo
Shri Lanka.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| நன்றியுரை | | |
| முகவுரை | | பக்கம். |
| அத்தியாயம்- 1 | அறிமுகம்- கம்பனியின் உருவாக்கமும் வளர்ச்சியும். | 01 — 19 |
| அத்தியாயம்-2- | கம்பனியின் நிர்வாக கட்டமைப்பும் அணி முகாமையும். | 20 — 37 |
| அத்தியாயம்- 3 | மனித சக்தி திட்டமிடலும் அட்சேர்க்கலும் பயிற்சியளிக்கலும். | 38 — 62 |
| அத்தியாயம்- 4 | ஊழியர் உறவும் தூண்டுதல் நடவடிக்கையும். | 63 — 83 |
| அத்தியாயம்- 5 | அணி முகாமையில் காணப்படும் பிரச்சினைகள். | 84 — 90 |
| அத்தியாயம்- 6 | முடிவுரை - தீர்வுகள். | 91 — 98 |
| | உசாத்துணை நூல்கள். | 99. |

# முகவுரை.

இன்றைய உலக நாடுகளில் குறிப்பாக வளர்முக நாடுகளை எடுத்து நோக்கும் போது அந்நாடுகள் யாவும் தமது பொருளாதாரத்திற்கு விவசாயத்தையே நம்பியிரு கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இந்த வகையில் இலங்கையும் தமது வருமானத்தைத் தேடும் துறையாக விவசாயத்தையே நம்பியிருக்கின்றது. இதனால் இலங்கையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள சகல மூலப் பொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இருந்தபோதிலும் முழு நாட்டினதும் தேவை களை உள்ளூர் விவசாயம் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் இல்லை. இக்குறையை ஓரளவு தானும் நிவர்த்திசெய்யக் கருதி அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து முக்கிய விவசாய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய முனைகின்ற வேளையில் எல்லாம் பெருமளவு அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதி வருமானம் குறைவான நிலையிலேயே இந்த அதிகரித்த இறக்குமதிச் செலவ னது உள்ளூர் அபிவிருத்திக்கான மூலதனப் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியுள்ளது. இ தகைய அந்நியச்செலாவணிப் பிரச்சினை மூலதனப் பற்றாக் குறை சிரமங்கள் என்பவ நீக்குமுகமாக " கூட்டுத்தாபனம் " என்னும் அமைப்பில் அரசு பல முயற்சிகளைத் தாபிக்க விரும்பின. இந்த வகையில் கூட்டுத்தாபனத்தின் பங்கானது மிகவும் முக்கியம தாகும்.

இவ்வாறான பல பிரச்சினைகளைத் தவிர்க்குமுகமாக அரசு நேரடியாக கைத் தொழிலில் ஈடுபடக்கூடிய சட்டத்தை உருவாக்கியது. ஏற்கனவே 1955ம் ஆண்டின் சட்டத்தின்கீழ் இயங்கிவந்த கூட்டுத்தாபனங்களையும் இணைத்தாக 1957ம் ஆண்டின் இலக்கம் 49 ஐக் கொண்ட அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்கீழ் உற்பத்திக் கூட்டுத்தாபனங்கள் என்ற அரசநிறுவனங்களைத் தோற்றுவித்து விவசாயத்தோடு இணைந்த வகையில் கைத்தொழிலையும் விருத்தி செ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் பயனாக அண்மைக் காலமாகி எமது நா டின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தொழில் துறையின் பங்கு கணிசமானளவு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்த போதிலும் அண்மைக்காலமாக இலங்கையிலுள்ள அரசாங்க கூட்டுத்

தாபனங்கள் அவை உருவாக்கத்தின் போது குறிக்கப்பட்ட பாரிய நோக்கங்களை அடைந்துள்ளனவா என ஆராயப்பட்ட போது அங்காங்கே பெரும் குறைபாடுகள் தலை தூக்கிக் காணப்பட்டன. நிர்வாகச் சீர்கேடுகளும் இலாபம் ஈட்டாத நிலையும் தொடர்ந்தேர்ச்சியான நட்டமும் சில கூட்டுத்தாபனங்களின் வழமையா நடவடிக்கையாயின ஒரு கூட்டுத்தாபனம் நிலைத்து நிற்பதற்கு பொதுமக்களுக்கு நம்பகரமான சேவையை வழங்குவதுடன் தனது உயர் வாழ்வுக் வேண்டிய இலாபத்தையும் உழைத்துக் கொள்வது அவசியம் எனக் கூறப்பட்டது. இந்தக் கூற்றுக்கு மாறாக இயங்கும் கூட்டுத்தாபனங்கள் அரசாங்கத்திற்கு பெரு சுமையாக விளங்குகின்றது.

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்குவதற்கான கா ங்களை ஆராய நியமிக்கப்பட்ட குழு முகாமைப் பிரச்சினையும் நிதிப் பற்றாக் குறையுமே முக்கிய காரணங்கள் எனக் கண்டறிந்தது. விசேடமாக அணி முகாமை காணப்பட்ட இடங்களிலே இத்தகைய நிலைமைக்கு காலாகியது . எந்தவொரு நி வனமும் தமது நோக்கி முன்னேற அதன் அணியை சரியான முறையில் அமைத்து நிர்வகிக்க வேண்டும்.

அரசாங்கத் துறையில் காணப்படும் நிர்வாகச் சீர்கேடுகளையும் லாபம் ஈட்டாத தன்மையையும் போக்க அவற்றோடு தனியார் துறையினையும் போட்டியிட வைக்கும் அளவுக்குத் தனியார் துறையையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற உண்மை கட காலங்களில் உணரப்பட்டு வந்தது . அதற்கு அமைவாக ஆட்சி செய்து வருகின்ற அரசாங்கங்களின் ஆட்சியின் போது, அரசாங்கத்திற்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள், கட்டிப்பால் தொழிற்சாலை, உரிக்குறாணை சீனிக் கூட்டுத்தாபனம் , இலங்கை போக்குவரத்து சபை என்பன தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தை நோக்குவோமாயின், கை அம்பாறை , கந்தளாய் ஆகிய இடங்களில் இரண்டு பாரிய தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் சீனி இலங்கை மக்களது தே தேவையைப் பூர்த்தி செய்யப் போதாத நிலையில் உள்ளது. மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருளாக சீனி காணப்படுவதுதான் இதற்குக் காரணமாகும். முடிந்தளவு எமது தேவையைப் பூர்த்தி செய்ய எமது அரசாங்கம் கடந்த காலங்களில் உலக நாடுகள் சிலவற்றில் இருந்து சீனியை இறக்குமதி செய்ய பெருமளவு செலாவணியை செலவிட்டு வந்துள்ளது. மேலதிக தொழிற்சாலைகளை நிறுவி உற்பத்தியைப் பெருக் மூலதனப் பற்றாக்குறை தடையாக அமைந்துள்ளது. வளர்முக நாடுகளின் பொதுவா அம்சமாகிய அப்பிளர்வு குறைவிருத்தி நாடாகிய இலங்கையையும் பாதித்ததில் வியப்பில்லை. எனவேதான் இலங்கையில் வெளிநாட்டு தனியார் கம்பனியினைச் சீனித்தொழிற்சாலை ஒன்றை அமைத்து உள்ளூர் மூலப்பொருட்களையும் ஊழியத்தையும் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வகையில் ஒப்பந்த அடிப்படையில் பெரிய பிரித்தானியாவைச் சேர்ந்த தனியார் கம்பனியினால் நிர்வகிக்கப்பட்டு பின் சீனாவைச் சேர்ந்த தனியார் கம்பனி ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டு வரும் நிறுவனம் தான் "பெல்வத்தை சீனிக் கம்பனி லிமிட்டெட் " ஆகும். இலங்கையிலே மொனறாகலை மாவட்டத்தைச் சேர்ந்த பெல்வத்தை என்னும் இடத்தில் இக்கம்பனி அமைக்கப்பட்டுள்ளது. சுற்றா விலுள்ள மூலப் பொருட்கள், ஊழியம் என்பவற்றைக் கொண்டே இக்கம்பனி தொழிற் படுகின்றது. சீரான நிர்வாகத்துடன் சிறப்பாக இயங்கிவரும் "பெல்வத்தை சீனிக் கம்பனி லிமிட்டெட்" டினது அணி முகாமை பற்றி ஆராய்வதே எனது இக்கட்டுரை நோக்கமாகும்.

இவ்வாய்வுக் கட்டுரைக்கான தரவுகளையும் விடயதானங்களையும் நேரில் சென்று கலந்தாலொசிக்கும் பெல்வத்தை சீனிக் கம்பனியின் உத்தியோகத்தர்களிடம் விளையும் மற்றும் கட்டுரைகள், ஆண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள் போன்றவைகளின் ஊடாகவே சேகரித்த பல சிரமங்கள் ஏற்பட்ட போதிலும் முகாமை பற்றியும் அதன் சாதனைகள் பிரச்சினைகள் என்பனபற்றி அறிந்த எனக்கு ஒரு புதிய அனுபவமாக இவ்வாய்வுக் கட்டுரையைப் பூர்த்தி செய்து உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்

ஆய்வாளர்,

யூ. எல். முஹம்மது ஜுஹாரி.